திரு. ந. தருமலிங்கம் : சட்டப்பேரவை துணைத் தலைவரவர்களே, மீன் பிடிக்கும் இடங்களை ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு ஏதாவது நிதி உதவி செய்து உள்ளதா ? இதுவரையில் இல்லையென்றால், மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அனுப்பப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசாங்கத்தின் சார்பில் 1958-ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி நிலையம் துவக்கப்பட்டது. மற்ற நான்கு இடங்களில் இருக்கும் மீன் பிடி நிலையங்கள் மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தது.

தடப்பள்ளி, காளிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்கள்.

* 71 வினா.—திரு எ. எம். இராஜா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடப்பள்ளி, காளிங்கராயன் வாய்க்கால் பாசனம் பெறும் நிலங்களுக்கு 1971ஆம் ஆண்டிற்குப் பின் தண்ணீர் தீர்வை உயர்த்தப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தடப்பள்ளி வாய்க்கால் பாசனம் பெறும் நிலங்களுக்கு மட்டும் 21—8—1971-ஆம் தேதிக்குப் பின் கீழ்க்கண்ட விவரப்படி தண்ணீர் தீர்வை உயர்த்த ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. ஆனால் காளியங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களைப் பொறுத்தவரையில் தீர்வையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்டத் திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், சிங்கியம் கிளை வாய்க்கால், கூகலூர் கிளை வாய்க்கால், அம்மாபாளையம் கிளை வாய்க்கால், அரக்கன் கோட்டை வாய்க்கால் மற்றும் வாணிப்புத்தூர் கிளை வாய்க்கால் ஆகிய பாசனங்கள் 21—8—1971-ஆம் தேதிக்கு முன்பு இரண்டாம் தரமான நீர்நிலைக ளென பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. இவைகள் கீழ்பவானி அணைக் கட்டு திட்டத்தின்கீழ் வடிகால் நீர், கசிவு நீர் வசதி பெறுவதால் மேற்படி நீர்நிலைகளால் பயன்பெறும் நிலங்களை கீழ்பவானித் திட்டத் தின் கீழுள்ள ஆயக்கட்டாகப் பதிவு செய்யவும், மேற்படி நீர்நிலை களின் பாகுபாட்டை ஒரு படி மேலாக உயர்த்தவும் வருவாய்த்துறை,

1972 டிசம்பர் 7]

அரசு ஆணை (பல வகை) எண். 2321, நாள் 21—8—1971-ன் படி ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக கீழ்க்கண்டவாறு தீர்வை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

	ஏக்கர் ஒன்றுக்கு.
	ரூ.
(1) ஒருபோக நன்செய்	15·00
(2) வரி இணக்கம் செய்யப்பட்ட இருபோக நன்செய் ..	20·00
(3) இருபோக நன்செய்	22·50

மேலே கண்டபடி அதிகரிக்கப்பட்ட தீர்வை பசலி 1381 முதல் அமலுக்கு வந்துள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், கூகக்லூர் கிளை வாய்க்கால் அத்தனை பகுதிகளுக்கும் வரி ஏற்றியிருப்பதாக கூறினார்கள். ஆனால், கூகலூர் கிளை வாய்க்கால் வருகின்ற பகுதிகளில் சில கிராமங்களில் இன்னும் வரிகள் ஏற்றபட்டதாகத் தெரியவில்லை. பழைய வரிதான் வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தடப்பள்ளி வாய்க்கால் பகுதிக்கு ஏற்றியிருக்கும்பொழுது, ஏன் காளிங்கராயன் வாய்க்கால் பகுதிக்கு ஏற்றவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காளிங்கராயன் கால்வாயைப் பற்றித் தனிக்கேள்வி போடவேண்டும். கூகலூர் கிளை வாய்க்கால் சம்பந்தப்பட்ட கிராமங்களில் வரி வசூலிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்து அதற்கு ஆவன செய்யும்.

திரு. ஏ. எம். இராஜா : தண்ணீர் தீர்வை முன்பிருந்ததைவிட இப்பொழுது உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், வாய்க்கால் பழுதடைந்திருக்கிறது. அந்தக் கால்வாய்க்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட முடிவதில்லை. காரணம் அவ்வளவு தண்ணீரையும் கொடுத்துவிட்டால், கரை உடைந்துவிடுகிறது. ஆகவே, கீழ்க்கரையில் டெய்ல்எண்டு பகுதிகளுக்குத் தண்ணீர் வருவதில்லை. என்னுடைய தொகுதியில் இருக்கிற பகுதிகளுக்குத் தண்ணீர் 20 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு தரம்தான் வருகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. தற்பொழுது உயர்த்தியிருக்கிற வரியை வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கால்வாயைப் பழுது பார்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கால்வாய் பழுதுபார்க்க வேண்டிய வேலையை அரசு நிச்சயம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Manufacture of Television sets.

*72 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have addressed the Centre during 1972 for the issue of a ''Letter of Intent'' for the setting up of a factory for the manufacture of Television sets and components in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கணபதி : டெலிவிஷன் செட்களை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு எந்தத் திட்டமும் இல்லை என்றாலும், டெலிவிஷன் வசதியை சென்னை நகரத்தில் செய்து தருவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசைப் பற்றிக் கேள்வி கேட்டதால், இல்லை என்று சொன்னேன். கூட்டுத் துறையில், ஜாயிண்டு செக்டாரில் 10,000 டெலிவிஷன் செட்கள் செய்வதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. டெலிவிஷன் எங்கே வைப்பது என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, கூட்டுத் துறையிலே எந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு வாரியமும், வில்கோ, திரு. ஓபுலு ரெட்டி என்பவரும்.

திரு எம். தேவராசன் : டெல்லியிலெல்லாம் டெலிவிஷன் வந்தபிறகு தமிழகத்திலும் விரைவில் அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.